# இராணியாக மாறிய பாம்பு



சிறுவர் குறுநாவல்

1-6 தரம்



அ. அருள்சுலக்ஷிகா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணியாக மாறிய பாம்பு

சிறுவர் குறுநாவல்

அ. அருள்சுலக்ஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இராணியாக மாறிய பாம்பு |
| ஆசிரியர் | : | அ. அருள்சுலக்ஷிகா |
| வகை | : | சிறுவர் இலக்கியம் |
| உரிமை | : | ஆசியருக்கு |
| அட்டைப் படமும் படங்களும் | : | ச.அ.அருள்பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : | 28 - 12 - 2013 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-52535-3-6 |
| விலை | : | ரூபாய் 160/= |


## இந்நூல் ...

எனக்கு வழிகாட்டும் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி நிறுவனர், அமரர் திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களுக்கும், இன்றைய மதிப்புக்குரிய அதிபர், ஆசிரியர்களுக்கும் சமர்ப்பணம் செய்கிறேன்.

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நமது ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் 2914ல் ஒன்பதாந்தரத்தில் கல்வி கற்கும் மாணவி செல்வி.அ. அருள்சுலக்ஷிகா 'இராணியாக மாறிய பாம்பு' என்ற கதை நூலை எழுதியுள்ளார். இந்த நூல் இவரது இரண்டாவது நூலாகும். ஆறாம் வகுப்புப் படிக்கும்போதே 'வீரபாபுவின் குதிரை' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

இக்கல்லூரிக்காக குறிப்படத்தக்க தொகை நூல்களைத் தந்துதவியவர். இந்த இளம் வயதில் எழுதுவது உண்மையில் பாராட்டப்பட வேண்டியதொன்று என்றே கருதலாம். சோதனைக்காகப் படித்து பரீட்சையில் யாரும் சித்தியடையலாம். ஆனால் எழுத்தாளன் ஆவதற்குத் தனிச் சிறப்பு வேண்டும். அதற்குச் சிந்திக்கும் திறனும், நல்ல தேடலும், முயற்சியும் தேவை. அவற்றை செல்வி அருள்சுலக்ஷிக்காவிடம் காண்கிறேன்.

இன்றைய சமூகத்தில் புத்தகங்களை வாங்கி வாசிக்கும் பழக்கம் அருகிவிட்டது. வீட்டிலுள்ளோர் தொலைக்காட்சிப் பெட்டிகளே தஞ்சம் என்று கிடப்பதைக் காண்கிறோம். ஒருவேளை தொலைக்காட்சிப் பெட்டி பழுதடைந்து விட்டாலே அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது தவிக்கின்ற பெற்றோர் எராளம் உண்டு. தொலைக்காட்சிப் பெட்டிக்குக் கொடுக்கும் முன்னுரிமை புத்தகங்களுக்குக் கொடுப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும். ஆசிரியர்களும். பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு புதிய புதிய நூல்களை அறிமுகம் செய்ய வேண்டும்.

நமது அதிபர்களும், ஆசிரியர்களும் தமது கல்லூரியில் ஒன்றுகூடலின் போது இவ்வாறான நிகழ்ச்சிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். 'இராணியாக மாறிய பாம்பு' என்ற இந்த நூலில் அன்பு, பாசம், பெரியோரை மதிக்கும் பண்பு, தொடர்பாடலின் போது கனிவாகப் பேசுதல். பிறருக்கு இரங்குதல், விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை. தற்துணிவு, விவேகம் ஆகியவற்றினால் வெற்றி கொள்ளும் திறனை இந்த இளம் எழுத்தாளர் விவரிக்கின்றார். இந்த நூலைக் கையில் எடுத்தால் வாசித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனம் வராது. அடுத்து என்ன நடக்கும் என்ற ஆவலை அழகாக நடத்திச் செல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் எவ்வளவு சேவை செய்தாலும் அவரைச் சமூகம் விரைவில் மறந்துவிடும். ஆனால் இளங்கோ, கம்பன், பாரதி. நமது கனகசுந்தரம்பிள்ளை, போன்றோரை நாமனைவரும் நினைவில் கொள்வதன் காரணம் யாது? இலக்கியச் சேவை செய்பவர் என்றும் நினைவு கூரப்படுவார். செல்வி.அ.அருள்சுலக்ஷிகா ஓவியத் துறையிலும் வல்லவர் பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், அகில இலங்கை என்று பலமட்டங்களிலும் வெற்றிப் பதக்கங்களை வென்றுவருகின்றார் அவரது முயற்சியைப் பாராட்டுகிறேன்.

அதிபர் என்ற வகையில் செல்வி அ.அருள்சுலக்ஷிகாவுக்கு அறிவுரை வழங்கவும் வேண்டும் என்ற கடமை எனக்குண்டு. பாடசாலையில் கற்கவேண்டிய பாடங்களையும் கவனமாகப் படிக்கவும் வேண்டும். பரீட்சைகளில் திறமையாகச் சித்தியெய்தவும் வேண்டும். உங்களால் நமது கல்லூரி பெருமையடையச் செய்வது உங்களது கடமை என்பதையும் மனதிருத்திக் கொள்ளுங்கள். இதனால் பாடசாலையும். உங்கள் பெற்றோரும் போற்றுதற்குரிய இடத்தினைப் பெறுவார்கள்.

நமது கல்லூரி மாணவியினால் எழுதப்பெற்ற இந்நூலின் ஒரு பிரதியையேனும் ஒவ்வொரு மாணவியரும் வாங்கி வாசிக்க வேண்டும். இதற்கு பிள்ளைகளது பெற்றோர் ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். உங்கள் பிள்ளைகளையும் வாசிக்கவும். வாசித்தவற்றை யோசிக்கவும். அவற்றை எழுதவும் தூண்டுங்கள். மொழியாற்றல் பெற்றவர் நமது சமூகத்தில் ஆற்றல் உள்ளவர்களாக விளங்குவார்கள்.

உங்கள் வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்

திருமதி. சுலோசனா ஜெயபாலன்
அதிபர்
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'இந்த நூல் எனது இரண்டாவது படைப்பாகும். முதலாவது நூல் வீரபாபுவின் குதிரை. அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. எனது அதிபர் முதல், ஆசிரியர்கள், நண்பிகள் என அனைவரும் வாழ்த்தினார்கள். எனக்கு வழிகாட்டும் இவர்களது ஆசியினால் இக்கதையையும் எழுதினேன். எனது அதிபர் சிறந்த வழிகாட்டி. அத்துடன் சிறந்த பண்பாளர். தனது பாடசாலைக்காகத் தன்னையே உருக்கிச் சேவை செய்கிறார். அவரைப்போல் நானும் ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆவலில் எழுதுவதையும், சித்திரம் வரைவதிலும் ஆவல்கொண்டு செயற்படுகிறேன். படிப்பதிலும் ஆர்வமுடன் இருக்கிறேன்.

இந்த நூலை எழுதியதும் வழமைபோல் எனது தாத்தாவிடம் ஒப்படைத்து விட்டேன். ஆனால் என்னால் இதற்கான படங்களை வரையமுடியாது போயிற்று. அப்பாவுக்கும் போதிய அவகாசமில்லை. அதனால் தாத்தாவிடம் அந்தப் பொறுப்பினை விட்டுவிட்டேன். எனது நூலாக்கத்துக்கு தாத்தாவே முழுப்பொறுப்பையும் எற்றுக் கொண்டார். எழுதுவது மட்டுமல்ல படிப்பிலும் கவனம் செலுத்தும்படி அடிக்கடி அதிபர் திருமதி. சுலோசனா ஜெயபாலன் அறிவுரை கூறுவார். இதையேதான் எனது அப்பாவும். அம்மாவும் கூறுவார்கள். அவர்களது அறிவுரைகளைக் கேட்டுக் கொள்வேன். நிறையவே எழுதி வைத்திருக்கிறேன். ஒரு வருசத்துக்கு ஒரு நூலாவது எழுதி வெளியிட வேண்டும் என்பது எனது ஆசை.

ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு என்னால் ஆனவற்றைச் செய்யவேண்டும் என்பது எனது ஆசை. நமது கல்லூரியின் நிறுவனர் அமரர் தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் சேவையை நினைந்து பார்க்கிறேன். அவரது பெரிய மனம் உலக சமுத்திரங்களைவிட விசாலமானது. எனது தாத்தா கேணிப்பித்தன் ச.அருளானந்தம் ஒரு எழுத்தாளர். சிறுவர்களுக்காக எழுதுபவர்.. தாத்தா கதைகளை எழுதியதும் என்னிடம்தான் முதலில் சொல்லுவார். நான் எனது அபிப்பிராயங்களைச் சொல்வேன். எழுதியபின் அக்கதைகளை வாசிப்பேன். பத்திரிகைகளில் வரும் சிறுவர் பகுதிகளை விடாது வாசிப்பேன். படுக்கைக்குப் போகும்போது ஒரு புத்தகம் என் கைகளில் இருக்கும். உறக்கம் வரும்வரை வாசிப்பேன். என்னை எழுதும்படி எனது தாத்தா தூண்டிக்கொண்டே இருப்பார்.

பரீட்சையில் சித்தியடைந்ததும் நான் எழுதி வைத்திருந்த கதைகளை தாத்தாவிடம் கொடுத்தேன். அவருக்குச் சந்தோசம். (The Famous Five) நூற்தொகுதியை வாங்கித் தந்து படிக்கும்படி கூறுவார். எனது தோழிகள் பலர் இந்நூல்களை வாசிக்கின்றார்கள். நாங்கள் எங்களுக்குள் விவாதித்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா சிறுவர் இலக்கியம் பற்றி என்னிடம் சொல்வார். ஆங்கிலத்தில் சிறுவர் இலக்கியங்களைப் படைத்தவர்களைப் பற்றிக் கூறுவார். எழுதிப் புகழ்பெற்றதையும் கேட்டு என்மனதில் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்து விட்டார். எழுதுவதும் வரைவதும் எனது பொழுதுபோக்காகும். எழுதுகிறேன்.

எனது அப்பாவின் வழிகாட்டல்களும், அம்மாவின் அறிவுரைகளும் என்னை ஓவியப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்ட வைக்கிறது. மாகாணமட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு பல வெற்றிகளைப் பெற்றுள்ளேன். எனது பாடசாலை என்னை வளர்த்து விடுவதில் துணைபுரிகிறது. 'வீடும் பாடசாலையும் நன்றாக அமைந்தால் ஒருவரது வாழ்க்கை ஒளிமயமாகும்' என்று எனது தாத்தா கூறுவார். அது எவ்வளவு உண்மை என்பதை இச்சிறுவயதில் உணர்கிறேன். எனக்கு வழிகாட்டி. அவ்வப்போது வாழ்த்தி வழிகாட்டுபவர் எனது கல்லூரி அதிபர் திருமதி.சுலோசனா ஜெயபாலன் அவர்கள். ஐந்தாம் வகுப்பில் எனது வகுப்பாசிரியர் திருமதி நளாயினி நிறையவே என்னை வழிப்படுத்தியுள்ளார்.

எனது இந்த நூலுக்கான அணிந்துரையை எழுதி அணிசெய்துள்ள எனது கல்லூரியின் அதிபர் திருமதி. சுலோசனா ஜெயபாலன் அவர்களுக்கும், எனக்கு வழிகாட்டியாக இருக்கும் எனது தாத்தா ச.அருளானந்தம் அவர்களுக்கும், அழகாக அச்சிட்ட நிசான் பிறின்ரேஸ் அலுவலர்களுக்கும், வாசகர்களாகிய உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் உங்களின் பிள்ளை. உங்களை நேசிப்பவள். உங்களது ஆதரவு கிடைத்தால் நிறையவே எழுதலாம். என்னை ஊக்குவிப்பது உங்களது கடமை என எண்ணி இந்த நூலை உங்கள் வசம்தருகிறேன்.

திருகோணமலையில் எழுத்தாளர்களிடம் ஒற்றுமையில்லை. இது வேதனைககுரியது. என்னைப்போன்ற இளம் எழுத்தாளர்களுக்குப் பெரியவர்கள் முன்மாதிரியாக இருந்து வழிகாட்ட வேண்டும். அதனைச் செய்யும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுடன்

அ.அருள்சுலக்ஷிகா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணியாக மாறிய பாம்பு

## 1

கோபாலபுரம் வளமான நாடு. அதனை அழகேஸ்வரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனது மனைவி கோமளவல்லி. அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தமகனுக்கு ஆனந்தவர்மன் என்று பெயரிட்டார்கள். இரண்டாம் மகனுக்கு அறிவழகன் என்றும் மூன்றாமவனுக்கு வளவன் என்றும் பெயரையிட்டார்கள்.



மூவரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். மன்னன் மக்களின் குறைகளைப் போக்கி நல்லாட்சி செய்தான். மக்கள் மன்னன்மேல் அன்பாக இருந்தார்கள். விதி யாரை விட்டது.? கோமளவல்லி நோய்வாய்ப்பட்டாள். வைத்தியர்கள் கைகளை விரித்தார்கள். அவள் இறந்துவிட்டாள். மன்னன் வருந்தினான். மன்னன் வேதனையில் வெந்தான். மன்னனின் நிலைகண்டு மக்களும் வருந்தினார்கள். அமைச்சர்கள் ஆறுதல் கூறினார்கள்.


மன்னன் மூன்று பிள்ளைகளையும் பார்த்தார். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்தார். அவர்களோடு அன்பாக இருந்தார். காலம் மெல்லக் கடந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பிள்ளைகள் வளர்ந்தார்கள். கவலையும் மன்னன் மனதை விட்டு மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. மன்னன் மக்களின் நலனில் கவனம் செலுத்தினான்.

இளவரசர்கள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். குதிரையோட்டம் போன்றவற்றில் சிறந்து விளங்கினார்கள். போர்ப் பயிற்சிகளையும் கற்றார்கள். மக்களிடம் அன்பாகப் பழகினார்கள். அவர்களது அன்பையும் பெற்றார்கள். மூத்தவனுக்குப் பதின்மூன்று வயது. அறிவழகனுக்கு பதினொரு வயது. வளவனுக்கு இப்போது ஒன்பது வயதாகிவிட்டது.



ஒருநாள் மூவரும் பொழுதுபோக்குக்காக விளையாடிக் கொண்டிருந்தார்கள். குதிரைச் சவாரியில் ஈடுபட்டார்கள். காவலர்கள் யாரும் இல்லை. அப்படியே பக்கத்தில் உள்ள காட்டுப்பகுதிக்கு சென்றார்கள். அங்கே நிறைய மான்கள் நின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை வேட்டையாட எண்ணினார்கள். ஆனால் அவற்றின் அழகை ரசித்தனர். இந்த உயிர்களைக் கொல்லக் கூடாது. அவற்றை வேட்டையாடமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

## 2

ஒரு மான்குட்டி ஓடித்திரிந்தது. அதனை மெதுவாகப் பிடித்தனர். அதனைத் தடவி விளையாடினார்கள். மான்குட்டியின் தாய்மான் விரண்டு கொண்டு நின்றது. நேரம் போனதை அறியாமலேயே நின்றார்கள். வானம் கறுத்து இருண்டு கொண்டு வந்தது. திடீரென மழை பெய்யும் அறிகுறி தெரிந்தது. மான்குட்டியை மெதுவாக விட்டார்கள். அது தாயிடம் துள்ளியோடியது. தாய்மான் குட்டியை அணைத்தவாறு காட்டினுள் ஓடியது. குதிரைகளில் ஏறினார்கள். அரண்மனையை நோக்கி விரைந்தார்கள். மழை பெய்யத் தொடங்கியது. காட்டின் எல்லையில் ஒரு பெரிய மாளிகை தெரிந்தது.



அது பாழடைந்த மாளிகை. கதவுகள் பூட்டியிருந்தன. அதன் முன்புற மண்டபம் விசாலமாக இருந்தது. குதிரைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வாரத்தில் நிறுத்தினார்கள். மண்டபத்தினுள் மழைக்காக ஒதுங்கினார்கள். மழை விட்டபாடில்லை.

திடீரென மின்னல் வெட்டி முழங்கியது. மூவரும் பயந்துவிட்டார்கள். உதவிக்குக் காவலர்கள் வரவில்லை. மழைவிட்டதும் போகலாம் என்று நின்றார்கள். குதிரைகள்



கனைத்தன. பூட்டிய மாளிகையினுள் வித்தியாசமான சத்தம் வருவதை உணர்ந்தார்கள். வளவனின் குதிரை விரண்டது. உன்னித் துள்ளியது. கட்டியிருந்த கயிறு அறுந்துவிட்டது. அது அரண்மனையை நோக்கி விரைந்தது. மற்றக் குதிரைகளும் கனைத்தபடி நின்றன. காது கொடுத்துக் கேட்டார்கள். காற்று வீசுவதுபோன்ற சத்தம் வந்தது. மூவரும் நெருங்கி நின்றார்கள். வளவன் நடுவில் நின்றான். அவனைச் சுற்றி மற்றச் சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்கள். மூவரையும் கயிற்றால் கட்டி இறுக்குவதுபோல் உணர்ந்தார்கள். ஆபத்தை உணர்ந்து கொண்டார்கள். அவர்களைச் சுற்றி ஐந்து தலைகளைக் கொண்ட நாகம் வளைத்திருந்தது. அதன் கண்களில் இருந்து ஒளிபரந்தது.

அந்த வெளிச்சத்தில் பாம்பின் படம் தெளிவாகத் தெரிந்தது. அழகான காட்சியாக இருந்தது. நல்ல வெளிச்சமாக இருந்தது. அவர்களை விழுங்குவது போல் ஆடிக்கொண்டிருந்தது. ஆனந்தவர்மன் துணிவுள்ளவன். தனது வலது கையை ஒருவாறு மீட்டெடுத்தான். இடையில் இருந்த வாளைத் தேடினான். அவனது கையில் வாள் படவேயில்லை. பாம்பின் உடல்தான் பட்டது. பாம்பு உணர்ந்து கொண்டது.



"அவசரப்பட்டால் உங்களை அப்படியே விழுங்கி விடுவேன். உயிர்மேல் ஆசையிருந்தால் நான் சொல்வதுபோல் செய்யுங்கள். உங்களில் ஒருவரை விடுவிப்பேன். அவர் நான் சொல்லும் வேலையைச் செய்து முடிக்கவேண்டும். செய்து முடித்தால் மூவருக்கும் விடுதலை. இல்லையென்றால் மூவரையும் விழுங்கிவிடுவேன்". தலையை அசைத்தவாறே பயங்காட்டியது. ஒரு பெண்ணின் குரலாக இருந்தது. மின்னல் ஒளியில் அழகிய பெண்ணின் சாயலலில் முகம் தெரிந்தது.

"மூவரும் செய்து முடிப்போம். மூவரையும் விடு. அப்பா எங்களைக் காணாது தவிப்பார்". பாம்பைப் பார்த்து வளவன் கூறினான். "இதை வேறுயாரிடமாவது சொல். உங்களில் ஒருவரைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவேன். அல்லது உங்களுக்குப் பதிலாக யாராவது வரவேண்டும்.'' பாம்பு கடுமையாக எச்சரித்தது. “சரி எனது தம்பிமாரை விடு. நான்தான் மூத்தவன். நான் செய்கிறேன்.''. ஆனந்தவர்மன் சத்தமாகச் சொன்னான்.

“அது நடக்காது. நீ போவதாயின் இவர்கள் இருவரும் இங்கேயே இருக்க வேண்டும். அல்லது வேறு யாராவது பிணையாக இருக்க வேண்டும்.'' நாகம் கூறியது.

## 3

“போகும் வழியில் ஆபத்து வந்தால் என்ன செய்வது.? ஆளுக்காள் துணையாக இருப்பது நல்லதல்லவா''?
அறிவழகன் வேண்டுகோள் விடுத்தான். பாம்பு சிரித்தது.
“என்ன செய்யவேண்டும். சொல்லு. செய்கிறேன்''. ஆனந்தவர்மன் கூறினான்.

“நல்லது. நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். இங்கிருந்து கிழக்காக ஐந்து கல் தொலைவில் ஒரு தாமரைக்குளம் இருக்கிறது. அந்தத் தாமரைக்குளத்தின் நடுவில் ஒரு பெரிய செந்தாமரைப் பூ இருக்கும். அந்தப்பூ ஒருநாளும் வாடாது. அந்தப் பூவுக்குள் ஒரு விதை இருக்கும். அது ஒவ்வொரு சித்திரை மாதம் மட்டுந்தான் வெளித்தெரியும். சித்திரை முழுநிலவு உச்சியில் வரும்போது பூவின் இதழ்கள் எல்லாம் விரியும். விரிந்து விதை பிரகாசிக்கும். நடுச்சாமம் முடிவதற்குள் அதனை எடுக்க வேண்டும். அது கழிந்தால் இதழ்கள் மூடிவிடும். பின்னர் எடுக்க முடியாது. எப்படியாவது அந்த விதையைக் கொண்டு வந்து தரவேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பூ இவ்வளவுதானா? நாங்கள் கோபாலபுரத்து இளவரசர்கள். நாங்கள் சொன்னபடி செய்வோம். எங்கள் தந்தையாருக்குத் தெரியாமல் வந்து விட்டோம். அவர் எங்களைத் தேடித் தவிப்பார். எனது தம்பிமாரை விட்டுவிடு." ஆனந்தவர்மன் சொல்லி நின்றான். "உங்களை எனக்குத் தெரியும். உங்களால்தான் இதனைக் கொண்டு வரமுடியும். நீங்கள் வருவீர்கள் என்பதையும் நான் அறிவேன். இப்போது சித்திரை மாதம். இன்னும் ஐந்து நாட்கள் மட்டுமே இருக்கிறது. குளம் இருக்கும் இடம் மிகவும் ஆபத்தானது. இப்போது உங்கள் தந்தை உங்களைத் தேடி வருவார். அவரை என்னிடம் கதைக்கவிடுங்கள். பின்னர் நீங்கள் மூவரும் குளத்துக்குச் செல்லும் வழியைச் சொல்வேன்.". நாகம் விரைவாகச் சொன்னது.

"தந்தையாருக்கு இந்த விசயம் தெரியாதே. அவர் எப்படி இங்கு வருவார்."? அறிவழகன் சொன்னான்.

"அதுதான் உங்கள் குதிரைகளில் ஒன்றை அனுப்பிவிட்டேனே. அதைப் பார்த்ததும். உங்கள் தந்தையார் இப்போது வந்து விடுவார். இன்னுமொன்று. நான் யார் கண்களுக்கும் தென்பட மாட்டேன். உங்களுக்கும், உங்கள் தந்தையார் கண்களுக்கும் மட்டுந்தான் தெரிவேன். ஆதலால் அவருடன் வருபவர்களை அரண்மனைக்கு அனுப்பிவிடச் சொல்லுங்கள். உங்களுக்கோ உங்கள் தந்தையாருக்கோ ஒரு ஆபத்தும் வராது. இது உறுதி. அவர் வந்ததும் எல்லாவற்றையும் கூறுகிறேன்" சத்தியம் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவன் நல்ல புத்திசாலி. “உனக்கு தாமரை விதை எதற்கு”? கேட்டான். “அதற்குள்தான் எனது வாழ்க்கையே அடங்கியிருக்கிறது. எப்படியாவது அதனைக் கொண்டு வாருங்கள். பின்னர் நடப்பதைப் பாருங்கள். பாம்பு சோகமாகச் சிரித்தவாறே கூறியது. சகோதரர்கள் ஆளையாள் பார்த்தனர். “அதோ அரசர் அழகேஸ்வரன் வருகிறார். நான் சொன்னதை மறக்கவேண்டாம். உங்கள் பின்னால் உள்ள இருக்கைகளில் அமருங்கள்.”. கூறிவிட்டுப் பாம்பு மௌனமானது.

தூரத்தில் அரசர் வந்து கொண்டிருந்தார். காவலர்கள் பின் தொடர்ந்து வந்தனர். வரும்போதே பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லி அழைத்தவாறே வந்தார். “ஆனந்தவர்மா! அறிவழகா! வளவா! எங்கே இருக்கிறீர்கள்.? உங்கள் தந்தையார் வந்திருக்கிறேன்”. சத்தமிட்டார். “இதோ இங்கே இருக்கிறோம். மழைவிட்டதும் புறப்பட இருக்கிறோம்”. அவர்களின் சத்தத்தைக் கேட்டதும் அரசர் ஓடிவந்தார்.

## 4

“இங்கே என்ன செய்கிறீர்கள். எப்படி இங்கு வந்தீர்கள். இந்தப் பாழடைந்த மாளிகைக்கு ஏன் வந்தீர்கள்?. வளவனின் குதிரை மட்டும் வந்தது. நான் பதறிவிட்டேன். வாருங்கள் போவோம்”. அழைத்தார். “தந்தையே காவலர்களைச் சற்றுத் தள்ளி நிற்கச் சொல்லுங்கள். இப்படி எங்கள் அருகில் வாருங்கள்”. ஆனந்தவர்மன் அழைத்தான். அரசர் அப்படியே செய்தார். காவலர்கள் விலகிச் சென்றார்கள். ஆனந்தவர்மனின் பக்கத்தில் போனார். பிள்ளைகள் எழுந்து நின்றார்கள். “தந்தையே ஒரு வேண்டுகோள். அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும்.” இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இப்படிக் கேட்கிறார்களே. அரசருக்கு ஆச்சரியம்.

"கூறுங்கள். நிறைவேற்றி வைக்கிறேன்." அப்பொழுதுதான் அவரது கண்களுக்கு அந்த அழகிய நாகம் தென்பட்டது.

"அரசே நான்தான் அவர்களை இங்கு அழைத்தேன். அவர்களால் எனக்கொரு காரியம் ஆகவேண்டும்".

"காரியமா? இவர்களாலா? இவர்கள் சிறியவர்கள். நான் அதனைச் செய்கிறேன்". அரசர் படபடத்தார்.

"அது உங்களால் முடியாது. புத்திசாலியான உங்கள் பிள்ளைகளால்தான் முடியும். இவர்கள் மூவரும் ஒவ்வொன்றில் வல்லவர்கள். அவர்களது வல்லமையை எனக்கு நன்றாகத் தெரியும். தயவு செய்து எனக்கு உதவுங்கள்". கெஞ்சியது. அரசர் யோசித்தார்.

"தந்தையே பாம்பின் வேண்டுகோளை நிறைவேற்ற உதவுங்கள்". வளவன் அரசரை வேண்டினான்.

" சரி உன் விருப்பப்படி நடக்கட்டும். அவர்களை அனுப்பு." அரசர் உடன்பட்டார். "அரசே! உங்களையும் எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர் என்பதையும் அறிவேன். எல்லாம் நல்லபடியாக நடக்கும். நீங்களும் அந்த இறைவனை எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள். காலம் கனிந்தால் உங்களது காலடியிலலேயே கிடப்பேன்." பாம்பு அனுதாபத்துடன் கூறியது.

"ஆனந்தவர்மா நீ உனது தம்பிமார்களுடன் செல்லலாம். நாளைக் காலை வாருங்கள். விபரமாகப் பலவிடயங்களையும் சொல்வேன். தாமரைக் குளத்தை அடையும் விபரத்தையும் கூறுவேன். அதன்பின் நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள்." பாம்பு மெல்லப் பின்வாங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்கள் தந்தை இங்கேயே நிற்கவேண்டுமா”?
“தேவையில்லை. அவருடன் செல்லுங்கள். சொன்னபடி இன்னும் ஐந்து நாட்கள் மட்டுமே உள்ளன. நாளைக் காலை வாருங்கள்.” பாம்பு மறைந்து விட்டது. அரசருக்கு எல்லாம் கனவுபோல் தெரிந்தது. தந்தையுடன் மூவரும் பாழடைந்த மாளிகையை விட்டு வெளியில் வந்தார்கள். தங்கள் மாளிகையை நோக்கி விரைந்தார்கள். அரசருக்குச் சங்கடமாக இருந்தது.

கிழக்கு வானம் சூரியனின் வருகைக்காகக் கோலம் போட்டது. ஆனந்தவர்மன் தனது தம்பிமாரோடு தந்தையிடம் சென்றான். “தந்தையாரே எங்களை வாழ்த்தி வழியனுப்புங்கள்.” வணங்கி நின்றார்கள். அரசருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பெற்றமனம் தவித்தது. வேறு வழியில்லை. “வெற்றியுடன் வாருங்கள்”. வாழ்த்தினார்.

விரைந்து குதிரைகளில் ஏறிப் புறப்பட்டார்கள். குதிரைகள் பாழடைந்த மண்டபத்தை நோக்கி விரைந்தன. மூவரும் குதிரைகளை விட்டிறங்கி மாளிகையினுள் சென்றார்கள். மாளிகையின் ஒரு அறைக்கதவு திறபட்டிருந்தது. அது பாம்பு வாழும் அறைபோல் தெரியவில்லை. அரண்மனையில் உள்ள அழகான அறைபோன்று தெரிந்தது. கண்களால் பேசிக்கொண்டார்கள்.

“எனதருமை இளவரசர்களே வாருங்கள். உங்களுக்காகவே காத்திருக்கிறேன். சொன்னபடி வந்துவிட்டீர்கள். நன்றி.”
குரல் ஒலித்தது. சத்தம் வந்தபக்கம் பார்த்தார்கள். ஒளிமட்டும் தெரிந்தது. அவர்களை அறியாமலேயே ஒரு மரியாதை உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உங்கள் பின்னால் பாருங்கள். ஒரு சிறியபெட்டி உள்ளது. அதனை எடுங்கள். அதற்குள் பல அறைகளுண்டு. பல பொருட்கள் உள்ளன. உங்களுக்குத் தேவையான அனைத்தும் உள்ளன. ஒரு வரைபடமும் உள்ளது. மூன்று முத்து மாலைகளும் உள்ளன. முதலில் முத்துமாலைகளை வெளியில் எடுங்கள். அவற்றைக் கழுத்தில் அணிந்து கொள்ளுங்கள். அவை யார் கண்களுக்கும் தெரியக் கூடாது. அவை உங்களைக் காப்பாற்றும்”. சொன்னபடி செய்தார்கள்.

“வரைபடத்தில் போகும் வழி தெளிவாக உள்ளது. கருமையான புள்ளிகள் உள்ள இடங்கள் தெரிவதைப் பாருங்கள். அவைகள்தான் ஆபத்தான இடங்கள். காவல் அதிகமாக உண்டு. உங்கள் சமார்த்தியத்தால் அதனைச் சமாளிக்க வேண்டும். குளத்தின் ஒருமூலையில் பழைய குடிசை இருக்கிறது. அதற்குள் நுழையுங்கள். முழுநிலவு வரும்வரை அங்கேயே இருங்கள். நிலவு உச்சி வானில் வந்ததும் விரைந்து செயற்படுங்கள்” சத்தம் வந்தது. கிரகித்துக் கொண்டார்கள்..

## 5

“தாமரை மலரில் இருந்து விதை பிரகாசமாக ஒளிவிடும். கைகளைக் குளத்து நீரில் அலம்பிக் கொள்ளுங்கள். என்னை மனதில் நினையுங்கள். விதையை நோக்கி உங்கள் கைகளை நீட்டுங்கள். விதை உங்கள் கைகளில் வந்துவிடும். அதனை நிலத்தில் வைக்கக் கூடாது. விதையைப் பெட்டியினுள் அதற்குரிய இடத்தில் வையுங்கள். வெற்றியுடன் பத்திரமாக எடுத்து வாருங்கள். அதில் குறிப்பிட்டபடி செய்யுங்கள். தடைகள் வரும். உங்களால் மட்டுமே அதனை நிறைவேற்றமுடியும்.” சத்தம் மெதுவாக ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தொடர்ந்தது. "உங்களுக்கு ஆபத்துக்கள் வரும்போது கண்களை மூடுங்கள். மூச்சை உள்ளிழுங்கள். அப்போது என்னை நினையுங்கள். ஆபத்துக்கள் நெருங்காது. உங்களுக்குப் பசி எடுக்கும்போது என்னை நினையுங்கள். உணவு முன்னால் இருக்கும்." பாம்பு விளக்கிக் கொண்டு சென்றது.

"உங்களை எப்படி நினைப்பது. உங்கள் பெயரைத் தெரிந்தால்தானே அழைக்கமுடியும்"? ஆனந்தவர்மன் மரியாதையுடன் வினவினான். அவனுக்கு பாம்பின் மேல் மரியாதை தோன்றியது.

"எங்கள் அன்னை ஸ்ரீதேவியே! என்றழையுங்கள். எல்லா உதவியும் கிடைக்கும் பெட்டியில் உள்ளவற்றை வெளியில் தெரியாவண்ணம் பாது காத்துக் கொள்வது உங்கள் கடமை." சத்தம் நின்றது.

ஆனந்தவர்மன் பெட்டியைப் பரிசோதித்தான். சகோதரர்கள் உதவினார்கள். எல்லாம் சரியாக இருந்தது.

"சரி வேறு என்ன செய்யவேண்டும்."? கேட்டான். "மகனே! உங்கள் விவேகத்தைப் பயன்படுத்தி வெற்றியுடன் வாருங்கள். இந்த சித்திரை முழுமதிநாள் கழியுமுன் உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். இல்லையேல் அடுத்த சித்திரை முழுமதிநாள் வரும்வரை காத்திருக்க வேண்டும். அதுவரை என்னால் காத்திருக்க முடியாது. எப்படியாவது நிறைவேற்றுங்கள்"

"அம்மா நாங்கள் சென்று வருகிறோம்." வணங்கினார்கள்.


"வெற்றியுடன் வாருங்கள். எனது ஆசி எப்போதும் இருக்கும்." திறந்திருந்த அறைக் கதவு மூடிக்கொண்டது. குதிரைகள் புறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் குறிப்பட்ட வழிகளில் சென்றார்கள். அதிவேகமாகக் குதிரைகள் சென்றன. தூரத்தே மலைத்தொடர் தெரிந்தது. அதனை நெருங்கினார்கள். பெரியதொரு சுவர் தென்பட்டது.

சுவரை உற்றுப் பார்த்தார்கள். பழைய சுவர்கள் அழிந்த நிலையில் கிடந்தன. அதனைத் தாண்டிச் சென்றார்கள். எங்கும் பச்சைப் பசேல் என்ற காட்சி கண்களைப் பறித்தன. விரைந்து சென்றார்கள். பொழுது மதியத்தில் நின்றது. ஒரு மரத்தின் கீழ்



நின்றார்கள். குளம் தெரிகிறதா என்று பார்த்தார்கள். பற்றைக் காடுகள் மறைத்தன. குதிரைகளைத் தட்டிவிட்டார்கள். அவைகள் விரைந்தன. தூரத்தே பழைய கோட்டை தெரிந்தது. அறிவழகன் வரைபடத்தை எடுத்து விரித்துப் பார்த்தான். அதில் கருமையான புள்ளி குறிபிட்டப் பட்டிருந்தது.


"அண்ணா! அதோ கோட்டை தெரிகிறது. இதில் ஆபத்து நமக்குக் காத்திருக்கும். எங்கள் அன்னை ஸ்ரீதேவியின் உதவி தேவைப்படும். அவரை இப்போது அழைப்போமா"? வினவினான்.

"கோட்டையின் பக்கம் போய்ப் பார்ப்போம். பார்த்தபின் முடிவெடுப்போம்.." ஆனந்தவர்மன் கூறினான். குதிரைகள் கோட்டை வாசலை அடைந்தன. கோட்டை வாசல் திறந்தே கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனூடகத்தான் உள்ளே செல்லலாம். கோட்டையை நன்றாக நோட்டம் விட்டார்கள். கோட்டை பல இடங்களில் சிதைந்து கிடந்தது. குதிரைகளின் மேல் இருந்தபடியே உள்ளே சென்றார்கள். வெளவால்கள்




தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். குதிரைகளின் குளம்பொலி வெளவால்களின் அமைதியைக் குழப்பியிருக்க வேண்டும். இடுப்பில் இருந்த வாள்களை உருவிக் கைகளில் வைத்திருந்தார்கள். "அண்ணா வெளவால்கள் நம்மைத் தாக்கலாம்.. எதற்கும் ஆயத்தமாக இருப்போம்". வளவன் சொல்லி வாய்மூடவில்லை. வெளவால் கூட்டம் அதிரடியாகத் தாக்கியது.

## 6

மூவரும் ஆயத்தமாகக் கைகளில் இருந்த வாளினைச் சுழற்றினார்கள். பம்பரமாகச் சுழன்று வாளை வீசினார்கள். என்ன ஆச்சரியம். வெளவால்களுக்கு வெட்டுக் காயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்படவில்லை. கூச்சலிட்டுப் பறந்து வெளியேறின. சற்று நேரத்தில் வௌவால்களின் ஒலியடங்கியது. மெதுவாகச் சென்றார்கள்.

"ஏய்..யாரடா நீங்கள்.? நில்லுங்கள். உங்களுக்கு இங்கென்ன வேலை? ஒரு அடியெடுத்து வைத்தால் தொலைத்துப் போடுவேன். வந்த வழியே ஓடித்தப்புங்கள்". குதிரை முகத்துடன் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அவனது தலை முகட்டில் முட்டிக் கொண்டிருந்தது. பருமனான உடல் பார்ப்பதற்க்குப் பயத்தை ஊட்டியது. அவனது கையில் கூரிய வாள் இருந்தது. கண்கள் சிவந்திருந்தன.

வளவன் எப்போதும் சமயோசிதமாகச் சிந்திப்பவன். "ஐயா நாங்கள் வழிப்போக்கர்கள். வழி தவறவிட்டோம். கனகபுரத்து அரசரைக் காணச் செல்கிறோம். வழி காட்டுவீர்களா"?



கெஞ்சுவதுபோல் கேட்டான். குதிரைமனிதன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணம் உற்று நோக்கினான். அவனது கண்களுக்கு ஏழைச் சிறுவர்கள்போல் தெரிந்தார்கள். "ஓ...அப்படியா.. அதுசரி.. சாப்பிட ஏதும் இல்லையா? தந்தாதல்தானே வழி விடுவேன்". தலையை ஆட்டியபடி கேட்டான். "ஐயா எங்களுக்கும் பசிக்கிறது. இங்கு ஒரு இடத்தைக் காட்டினால் ஒரு நொடியில் உணவைச் சமைத்து விடுவோம். இடம் கிடைக்குமா"? பதிலை எதிர்பார்த்தார்கள்.

அவன் கண்கள் சுழன்று வந்தன. "அந்த மூலையில் சுவருக்கு வெளியே சமையுங்கள்". அனுமதி கிடைத்தது. கோட்டையின் வெளிப்புறம் வந்து விட்டார்கள். தங்கள் முடிச்சுகளை அவிழ்த்தார்கள். ஆனந்தவர்மன் கண்களை மூடினான். "எங்கள் அன்னையே! ஸ்ரீதேவியே! எங்களுக்கு உதவி தேவை." தியானித்தான்.

"மகனே வேண்டியது கிடைக்கும். உங்களுக்குத் தெரியாமலேயே பணிவிடை செய்ய ஆட்கள் வந்திருக்கிறார்கள். பயம் வேண்டாம். குதிரைமனிதன் இந்தக் கோட்டையின் இளவரசன். கனகபுரத்தின் வாரிசு. திருமாவளவன். ஒரு முனிவரின் சாபத்தால் இப்படியாகிவிட்டான். நிறைய உணவு கொடுத்தால் மூன்று நாட்களுக்கு எழும்பவே மாட்டான். சண்டையில் அவனை வெல்ல முடியாது. சாதுரியமாகத்தான் வெல்லலாம். இன்னும் சற்று நேரத்தில் உணவு வந்து விடும். நீங்கள் சமைப்பதுபோல் பாவனை செய்யுங்கள்". ஆனந்தவர்மனின் காதுகளில் குரல் ஒலித்தது.

" ஆனந்தவர்மா"!

"தாயே!"

"கவனமாகக் கேள். அவன் உணவு உண்டதும் தூங்கிவிடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உங்கள் சமார்த்தியத்தால் தூங்கவிடாது பார்க்க வேண்டும். ஒரு பொழுது அவனைத் தூங்கவிடாது பார்த்துக் கொள்வது உங்களது கட்டாயக் கடமையாகும். பிறகு பாருங்கள். உங்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைக்கும்" குரல் தணிந்தது.

"நன்றி தாயே" ஆனந்தவர்மன் கண்களைத் திறந்தான். தம்பிமாருக்குக் கட்டளையிட்டான். விறகு பொறுக்கி அடுப்பைப் பற்றவைத்தார்கள். குதிரையில் இருந்த சில பாத்திரங்களை எடுத்து சமைப்பதுபோல் பாவனை செய்தார்கள். பார்த்திருக்க உணவு தயாராக இருந்தது. வளவன் மெதுவாக அந்தக் குதிரை முக மனிதனிடம் சென்றான்.

"ஐயா உணவு தயார். தாமரை இலையில் சாப்பிடலாமா? அல்லது எங்களது பாத்திரங்களில் சாப்பிடலாமா? என்று சொன்னால் அப்படியே செய்யலாம்." பணிவுடன் விண்ணப்பித்தான்.

"தம்பி இப்படி யாரும் இதுவரை என்னிடம் நடந்தது இல்லை. தாமரை இலையில் சாப்பிடுவது நல்லது. ஆனால் அதைப்பறித்து வருவது சிரமம்." தயங்கியபடியே அவன் சொன்னான்.



"இதிலென்ன சிரமம். எங்கள் அண்ணன் ஒரு நொடியில் பறித்து வருவான். கட்டளை இடுங்கள்". கைகட்டிப் பணிவோடு நின்றான்.

"அதோ தெரிகிறது குளம். அங்கே தாமரை இலைகளைப் பறிக்கலாம். ஆனால் ஆபத்து இருக்கும். என்னால் அங்கு வரமுடியாது. குளத்தின் ஓரமெங்கும் புதைகுழியாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் வைத்தால் புதைந்து விடும். கவனமாகப் பறிக்க வேண்டும். நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருப்பேன். சீக்கிரம் அண்ணனைப் போகச் சொல்." அவன் விடை கொடுத்தான்.

## 7

வளவன் ஆனந்தவர்மனிடம் சொன்னான். ஆனந்தவர்மன் குதிரையில் தாவி ஏறினான். அறிவழகனும் பின்னால் சென்றான். ஒரு நொடியில் குளத்தின் அருகே நின்றார்கள். "எங்கள் அன்னையே ஸ்ரீதேவியே எங்களுக்கு உங்கள் உதவி தேவை." கண்மூடித் தியானித்தான்.



"மகனே நீ எங்கு நிற்கிறாய் என்பதைப் பார்க்கின்றேன். குதிரையில் கயிறு இருக்கிறது. கயிற்றின் ஒரு நுனியைக் குதிரையில் கட்டு. அறிவழகனை அதில் இருத்து. அறிவுரை செய். மறு நுனியைக் குளத்தினுள் வேகமாக வீசு. அது குளத்தினுள் இருக்கும் கல்லுடன் சேரும். அதனைக் கட்டுவதற்கு உதவிகள் கிடைக்கும். கயிற்றைப் பிடித்தபடி நிலத்தில் கால்கள் படாதவாறு தொங்கிக் கொண்டு செல். குளத்தின் நடுவில் உள்ள கல்லில் இருந்துகொண்டு இலைகளைப் பறித்துக் கொள். அத்துடன் சூழலைப் பார்த்துக் கொள். தாமரை மொட்டுக்கள் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகப் பார்த்துக் கொள்". ஆனந்தவர்மனின் செவிகளில் ஸ்ரீதேவியின் குரல் ஒலித்தது. ஆனந்தவர்மன் வேகமாகச் செயற்பட்டான். ஸ்ரீதேவியின் கட்டளைப் படியே செய்தான்.

கயிற்றைப் பிடித்தபடி தொங்கியவாறு குளத்தினுள் இருக்கும் கல்லை அடைந்தான். குளத்தின் சூழலைப் பார்த்தான். எங்கும் மலர்வதற்கேற்ற மொட்டுக்கள் தெரிந்தன. எந்த மலரில் ஸ்ரீதேவி குறிப்பிட்ட விதை இருக்கும் என்பதைக் கண்டறிய முடியவில்லை. வேகமாக இலைகளைப் பறித்தான். இரண்டு நாட்களுக்குரிய இலைகளைப் பறித்துக் கொண்டான். அத்துடன் அன்றலர்ந்திருந்த தாமரை மலர்களில் இரண்டை மட்டும் பறித்தெடுத்தான். வந்ததுபோல் கயிற்றில் தொங்கியவாறே கரையை அடைந்தான்.

குதிரையில் தாவியேறி கோட்டையை அடைந்தார்கள். தாமரை இலையொன்றை எடுத்தான். அதனைத் தூய்மைப்படுத்தி கொஞ்சம் உணவையும் படைத்துத் தாமரை மலர் ஒன்றையும் வைத்தான். தம்பிமார் புடைசூழ ஸ்ரீதேவியை தியானம் செய்தான்.

பின்னர் தாமரை இலைகளையும், மலரையும் எடுத்துக் கொண்டான். உணவு வகைகளைத் தம்பிமார் எடுத்துக் கொண்டார்கள். குதிரை மனிதனிடம் சென்றார்கள். "ஐயா வாருங்கள். உணவருந்தலாம்." பணிவோடு அழைத்தான்.



குதிரை மனிதன் வந்தான். அறிவழகன் அவனது காலில் தண்ணீரை வார்த்துக் கழுவினான். கைகளையும் முகத்தையும் அலம்புவதற்குத் தண்ணீரைக் கொடுத்தான். அவன் கழுவிக் கொண்டான். வளவன் ஒரு வெள்ளைத்துணியை விரித்தான். அதில் குதிரை மனிதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமருமாறு வேண்டினான். அவனும் அப்படியே செய்தான். குதிரை மனிதன் முன்னால் ஆனந்தவர்மன் இலைகளைப் பரத்தி தண்ணீர் தெளித்தான். பின்னர் உணவினைப் படைத்தான். தாமரை மலரை உணவின் பக்கத்தில் வைத்து வணங்கி நின்றான். "ஐயா சாப்பிடுங்கள்" ஒரே குரலில் சொன்னார்கள்.

"நீங்கள் சாப்பிடவில்லையா"?

"முதலில் நீங்கள் பசியாறுங்கள் பின்னர் நாங்கள் சாப்பிடுவோம்" என்றார்கள். "நல்ல புத்திசாலிச் சிறுவர்கள்". அவன் சொல்லிச் சிரித்துக் கொண்டான். "ஐயா ஒரு வேண்டுகோள்." வளவன் விண்ணப்பித்தான். "என்னது"? ஒரு கவள உணவை வாயினுள் திணித்தவாறே கேட்டான். "நீங்கள் கோபிக்கக் கூடாது." வளவன் தொடர்ந்தான். "இல்லை. நான் கோபிக்க மாட்டேன். சொல்லுங்கள்".

"நாங்கள் சாப்பிட்டபின் எங்களோடு கதைக்க வேண்டும். நாங்கள் சொல்லும் கதைகளையும் நீங்கள் கேட்கவேண்டும். உங்கள் கதைகளையும் சொல்ல வேண்டும். எனக்கு நொடி கேட்பதில் ஆர்வம். உங்களுக்குத் தெரிந்த நொடிகளைச் சொல்லித் தரவேண்டும்" வளவன் புத்திசாலி. அவன் பணிவாகவும் தெளிவாகவும் சொன்னான்.

"பூ இவ்வளவுதானா? நீங்களும் சாப்பிடுங்கள். நீ சின்னப்பையன். உன்னோடு கதைக்கச் சந்தோசமாக இருக்கிறது. கதைப்போம்." குதிரை மனிதனிடம் இருந்து நல்ல பதில் வந்தது. அவர்களுக்குச் சந்தோசமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை மனிதனுக்கு சந்தோசம் உண்டானது. "சாப்பாடு நல்ல சுவையாக உள்ளது. உங்களுக்கு நன்றாகச் சமைக்கத் தெரியுதே? கெட்டிக்காரர்கள்தான்." சாப்பிட்டவாறே புகழ்ந்தான். அவன் சாப்பிட்டான். அவன் "போதும்...வேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தான். சிறுவர்கள் விடுவதாயில்லை. ஒவ்வொருவரும் ஆவலோடு பரிமாறினார்கள். வயிறாறச் சாப்பிட்டான். தண்ணீரை எடுத்துக் கொடுத்தார்கள். அவனது கைகளைப் பற்றிக் கழுவி விட்டார்கள். சாப்பிட்டதும் இலைகளை அகற்றித் துப்பரவு செய்தார்கள்.

அறிவழகன் வாழைப்பழங்களைத் தட்டில் வைத்துக் கொடுத்தான். குதிரை மனிதன் சந்தோசத்துடன் பெற்றுக் கொண்டான். அவற்றை உண்டான்.

ஆனந்தவர்மன் ஒரு முடிச்சை அவிழ்த்தான். அதற்குள் வெற்றிலை பாக்கு இருந்தன. அதனைத் தாம்பூலம் என்பார்கள். தாம்பூலம் பக்குவமாக மடிக்கப் பட்டிருந்தது. அவற்றை எடுக்கும்போது "எங்கள் அன்னையே! ஸ்ரீதேவியே! எங்களுக்குத் துணையாய் இரு." வாய்க்குள் முணுமுணுத்தான்.

"மகனே தாம்பூலத்தைக் கொடு. அதனை உண்டால் திருமாவளவனுக்கு நித்திரை கலைந்து விடும். தாம்பூலம் நல்ல சுவையானது. அடிக்கடி கேட்டால் எடுத்துக் கொடு" அவனது காதுகளில் மட்டும் ஒலித்தது. தாம்பூலத்தை எடுத்துக் குதிரை மனிதன் முன் வைத்தான். "இவற்றை யெல்லாம் எப்படிக் கொண்டு வந்தீர்கள்."? குதிரை மனிதன் கேட்டான். இவனுக்கு எப்படிக் கூறுவது? அன்னை ஸ்ரீதேவியின் கருணையால் கிடைத்தது. என்று கூறலாமா? வில்லங்கத்தில் மாட்டிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்கு உதவும் பெரியவர்களுக்குக் கொடுப்பதற்காக எடுத்து வந்தோம். நீங்கள் பெரிய மனது வைத்து உதவுகிறீர்கள். அதனால் எங்களுக்கு நீங்கள் பெரியவர். உள்ளத்தால் உயர்ந்தவர். அதனால் உங்களுக்கும் தருகிறோம்." பணிவுடன் ஆனந்தவர்மன் கூறினான்.

## 8

.குதிரை மனிதன் சந்தோசப்பட்டான். தாம்பூலத்தைப் பெற்றுக் கொண்டான். "சரி நீங்கள் சாப்பிடுங்கள். நான் தாம்பூலத்தைப் போடுகிறேன்". கூறிக்கொண்டு அதனைச் சுவைத்தான். சிறுவர்கள் உணவை விரைந்து உண்டார்கள். சாப்பிட்டதும் குதிரை மனிதனிடம் வந்தார்கள். அவன் சுவரோரத்தில் நின்ற பெரிய மரத்தடியில் நின்றான். "அண்ணா அவரை உறங்கவிடக்கூடாது." வளவன் உசார்படுத்தினான்.

"என்ன அதற்குள் சாப்பிட்டு விட்டீர்களா"? கேட்டவாறே இருக்க முயன்றான். "ஐயா! அண்ணன் ஒரு நொடி சொன்னான். எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லித் தாருங்கள்". கேட்டு நின்றான். குதிரை மனிதன் சிரித்தான்.

"என்ன நொடி சொல்லு பார்ப்போம்." அவன் கேட்டான். "விடிய விடிய பூப்பெட்டி. விடிந்து பார்த்தால் வெறும் பெட்டி. அது என்ன? என்று கேட்டான்". என வளவன் கூறினான்.

குதிரை மனிதன் சிரித்தான்.

"இதுகூடவா உனக்குத் தெரியவில்லை? சரி இரவு நேரத்தில் நீ வானைப் பாத்ததில்லையா"?

"பார்த்திருக்கிறேன்."

"இரவில் வானில் என்ன தெரியும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானில் என்ன தெரியும்?" யோசிப்பதுபோல் பாசாங்கு செய்தான்.

"ஆ.... நட்சத்திரங்கள் தெரியும்"

"விடிந்தபின் வானில் நட்சத்திரங்கள் தெரியுமா?"

"தெரியாது."

"அதுதான் அதற்கு விடை" குதிரை மனிதன் பதிலிறுத்தான்.

"அதெப்படி? நட்சத்திரங்களை எப்படிப் பூக்கள் என்று சொல்லலாம்?" வளவன் கதையை நீடித்தான். குதிரை மனிதனுக்குச் சந்தோசமாக இருந்தது. வளவனின் வெகுளித்தனம் அவனுக்குப் பிடித்திருந்தது.

"தம்பி நட்சத்திரங்கள் வானில் இருந்து பூக்கள் போல் மின்னுகின்றன. அதனால்தான் அவற்றைப் பூக்களாக நினைத்துக் கொள்கிறோம். இப்படி யோசிப்பதற்கு நொடிகளை புனைகிறோம். விளங்குதா"? அவன் விளக்கினான்.

"விடிந்ததும் நட்சத்திரங்கள் எங்கே போய்விடுகின்றன?"

"சரியான ஆளப்பா நீ. நல்ல கேள்விகளைக் கேட்கின்றாய்? மறந்தே போய்விட்டேன். உங்கள் பெயர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லையே. தம்பி உன் பெயரென்ன"?

"ஐயா எனது பெயர் வளவன். அது எனது பெரிய அண்ணன் ஆனந்தவர்மன். அடுத்தது எனது சின்ன அண்ணன் அறிவழகன். நான்தான் கடைக்குட்டி. வளவன்." புன்னகையோடு கூறினான்.

"வளவா! நீ புத்திசாலி. உன்னோடு கதைத்துக் கொண்டே இருக்கலாம்போல் தெரிகிறது. சரி விளக்கம் சொல்லட்டுமா?" குதிரை மனிதன் தொடங்கினான். வளவனுக்குக் குதூகலமாக இருந்தது. நட்சத்திரங்கள் அப்படியேதான் இருக்கின்றன. சூரிய ஒளியில் அவை நமது கண்களுக்குத் தெரிவதில்லை. சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகணத்தின்போது அவை தெரியும்.'' விளக்கினான். சிறுவர்களுக்கு அதிசயம். இவ்வளவு தெளிவாகப் பேசுகிறாரே. ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள்.

“ஐயா! ஒரு தடியை வெட்டாமல் முறிக்காமல் எப்படிச் சிறிதாக்கலாம்.? அண்ணன் என்னைக் கேட்டுத் தொந்தரவு செய்கிறான். இந்தத் தடியை எப்படி சிறிதாக்கலாம்? என்ன செய்வது? நீங்கள்தான் உதவி செய்யவேண்டும்''. வளவன் கையில் இருந்த தடியைக் கீழே வைத்தான்.

“வளவா! இதற்குப் போய் அலட்டிக் கொள்ளாதே. இப்படி வா. இதைவிட நீளமான தடியொன்றை எடுத்து வா''. என்றான். வளவன் எடுத்து வந்தான்.

இந்தத் தடியின் பக்கத்தில் வை. இப்போது எது சிறியது.? பார்.''

“சா...எனக்கு இது தெரியவில்லையே!. ஐயா! உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. நீங்கள் ஒரு அதிசயப்பிறவிதான். இந்த நாட்டின் மன்னன் போல் தெரிகிறது. உங்களோடேயே இருந்து விட்டால் நான் பல நல்லவிடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். நீங்கள்தான் எனக்குக் குரு.'' வணக்கத்துடன் கூறினான்.

குதிரை மனிதனின் முகத்தில் சோகம் குடிகொண்டதை அவதானித்தான். பக்கத்தில் ஆலமரம் நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. மரத்தின் கீழ் சென்றார்கள். ஆலமரத்தின் கீழ் கல்லாசனங்கள் கிடந்தன. அதில் குதிரை மனிதன் அமர்ந்தான். வளவன் தரையில் அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

“ஆனந்தவர்மா! அறிவழகா! நீங்களும் இப்படி வந்து அமருங்கள்.'' அழைத்தான். அவர்கள் பயபக்தியாக வந்து அமர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா! இந்த மரத்தின் விழுதுகள் அழகாக தொங்குகின்றன. விழுதுகளில் ஊஞ்சல் ஆடினால் சந்தோமாக இருக்கும்" வளவன் விளையாட்டுத்தனமாகக் கூறினான்.

அதற்கென்ன ஆடலாம். நான் ஊஞ்சல் கட்டிவிடுகிறேன்". கூறிக்கொண்டே அதன் விழுதுகளை இணைத்துக் கட்டினான். "தம்பி! இதில் ஊஞ்சல் ஆடு. சந்தோசமாக இருக்கும். கூறிக்கொண்டு மரத்தடியில் அமர்ந்தான். வளவன் ஆடினான். "இந்த மரத்தில் ஏறிவிளையாடினால் நன்றாக இருக்கும்".



கூறிக்கொண்டு ஏறப்போனான். "தம்பி அதில் ஏறவேண்டாம். அதனால் வந்த வினைதான் இந்தக் குதிரை முகம்." கவலையுடன் கூறினான்.

அவர்களுக்கு ஆச்சரியம். அசந்துபோனார்கள். அதனை அறியும் ஆவலோடு குதிரை மனிதனைச் சூழ்ந்து கொண்டு அன்போடு பார்த்தார்கள்.

வளவன் அதிசயித்து நின்றான். "ஐயா எப்படிக் குதிரை முகம் வந்தது? இதனை மாற்றமுடியாதா"? ஆனந்தவர்மன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முடியும். வழி இருக்கிறது. காலம் கனிந்து வரும்போது குதிரைமுகம் விலகிவிடும். அதற்காகத்தான் காத்திருக்கிறேன். எனது அக்கா அதற்குரியவர்களை அனுப்பி வைப்பாள். அதுவரை நான் இவ்வாறுதான் பசித்துக் களைத்துக் கிடக்க வேண்டும்." என்றான்.

## 9

ஆனந்தவர்மனுக்குச் சற்றுப் புரிந்தது. "ஆனந்தவர்மா! நீங்கள் இப்போது இருப்பது எங்கள் இராச்சியத்தில். இந்தப் பாழடைந்த கோட்டைதான் எங்கள் அரண்மனை. எனது தந்தை, தாய், அக்கா நான் எவ்வளவு சந்தோசமாக வாழ்ந்தோம். நினைக்கவே கண்ணீர் வருகிறது. எனது அக்கா சௌந்தர்யா இந்த இராச்சியத்தின் ராணி. அவள் இப்போது எங்கிருக்கிறாள் என்று தெரியாது. ஆனால் அவள் ஒருநாள் என்னை மீட்டெடுப்பாள்". கவலையோடு கூறினான். அவனது குரலில் நம்பிக்கை இருந்தது.

"அப்படி என்ன இந்த ஆலமரத்தில் இருக்கிறது? அது ஒரு சாதாரண மரந்தானே"? அறிவழகன் கூறுக்கிட்டான்.

சாதாரண மரந்தான். அதனடியில் வேர்கள் பரந்திருக்கிறது. அவற்றின் நடுவில் ஒரு முனிவர் தவம்செய்து கொண்டிருந்ததை நாங்கள் அறியவில்லை. நான் குதிரையோட்டத்தில் கெட்டிக்காரன். பலதிசைகளிலும் குதிரையை ஓட்டுவேன். அக்கா பயமறியாதவள். பாம்புகளைக் கண்டும் அஞ்சமாட்டாள். அவளும் குதிரையோடுவதில் கெட்டிக்காரி. ஒருநாள் நான் குதிரையை ஆல மரத்தின் கீழ் விட்டு மரத்தில் ஏறினேன். ஆலங்கிளையில் உயரத்தில் இருந்து குதிரைமேல் பாய்ந்து விரைந்தேன். இப்படிப் பலமுறை செய்தேன். அக்காவும் குதிரையோட்டத்தில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது குதிரையை ஆலமரவேர்களுக்கு ஊடாகவும் செலுத்தினேன். அப்போது முனிவர் இருந்ததைக் கவனிக்கவில்லை. அவரைத் தாண்டிக் குதிரை சென்றது. அவரைச் சுற்றி நாகங்கள் வாழ்ந்தன. அவை வெருண்டு வெளியில் வந்தன. அக்கா ஒரு நாகத்தின் வாலைப் பிடித்துச் சுழற்றி வீசினாள். அது முனிவரின் காலடியில் போய்விழுந்தது. முனிவர் வெளியில் வந்தார். அவரது கையில் கமண்டலம் இருந்தது. அவரது பார்வையில் நெருப்புத் தெரிந்தது. அவரது தோற்றத்தைக் கண்டு பயந்தோம்.

கமண்டலத்தைச் சரித்துத் தீர்த்தத்தை எடுத்தார். அக்காவைப் பார்த்தார். "நீ நாகமாக மாறக்கடவாய்," என்னைப் பார்த்து "நீ குதிரை முகத்துடன் திரியக் கடவாய். உங்கள் இராச்சியம் அழியட்டும் என்று சாபமிட்டார்". குதிரை மனிதன் அழத்தொடங்கினான்.



"ஐயா! நீங்கள் அழலாமா? எல்லாம் நல்லபடியாக நடக்கும்." ஆனந்தவர்மன் கூறினான். "இதற்குச் சாபவிமோசனம் இல்லையா"? வளவன் கேட்டான். நாங்கள் முனிவரின் கால்களைப் பிடித்துக் கெஞ்சினோம். நாங்கள் தெரியாத்தனமாகச் செய்த பிழையை மன்னியுங்கள் என்றோம். அவர் கடுங்கோபத்தோடு நின்றார். அக்கா பயத்தால் நடுங்கிவிட்டாள். அவள் கண்கள் கடலாகின. அழுதாள்.

கால்களைப் பிடித்தவாறே கிடந்தோம். அவரது மனம் இரங்கிவிட்டது. உங்கள் குளத்தில் ஒவ்வொரு சித்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமி அன்று அதிசயமான தாமரைப் பூ மலரும். அந்தத் தாமரைப்பூவின் விதையை எல்லாராலும் எடுக்கமுடியாது. அதற்கான சாதுரியம் வேண்டும். அவர்களை சௌந்தர்யா உணர்ந்து கொள்வாள். அவள் அதற்காக நோன்பிருந்து சக்தியைப் பெறுவாள்.



அந்த மலரின் விதையை எடுத்து வருபவர்கள் உன்னை நாடி வருவார்கள். அந்த விதையை நீ கையில் எடுத்துக் கண்ணில் ஒற்றியதும் உனது குதிரை முகம் மறைந்துவிடும். நீ இளவரசானாவாய். உனது நாடு வளம் பெறும். அந்த விதையை சௌந்தர்யாவின் வாயில் போட்டதும் நாகவுடல் நீங்கும். கோபாலபுரத்து மன்னனின் மனைவியாவாள். என்று கூறிச் சென்றார்."

பலநாட்கள் கழிந்தன. எங்களது தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டது. தாய் தந்தையர் வருந்தி மாண்டுவிட்டனர். நான் குதிரைமுகத்துடன் இப்படித் திரிகிறேன். அக்கா நாகமாகிப் போனாள். அவள் இப்போது எங்கிருக்கிறாளோ தெரியாது." விம்மி விம்மி அழுதான்.

"ஐயா! இனிக் கவலைப் படாதீர்கள். நாங்களும் உங்களுடன் இருப்போம். விரைவில் உங்கள் துயர் தீரும்". ஆறுதல் கூறினார்கள். "நீங்கள் கூறும் ஆறுதலை இதுவரை நான் கேட்கவில்லை. நீங்களும் என்னைவிட்டுப் போய்விட்டால் எனக்கு ஆறுதலளிக்க யாருமில்லை. என்னோடு இருந்துவிடுங்கள்". விம்மலுடன் குதிரை மனிதன் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளவரசரே! தங்கள் விருப்பம் எங்கள் பாக்கியம். உங்களுடன் இருப்போம். எங்கள் இளவரசர் திருமாவளவனுடன் இருப்பதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை". அறிவழகன் சொன்னான். "எனது பெயர் திருமாவளவனா? யார் சொன்னது. கூறுங்கள்". குதிரை மனிதன் அதிசயத்துடன் கேட்டான்.

"நீங்கள் இந்தநாட்டின் இளவரசர் என்றீர்கள். இங்கு திருமாவளவன் என்ற பெயரில் இளவரசர் இருந்தார் என்று சிலர் கூறினார்கள். அதுதான் அப்படிக் கூறினோம்". அறிவழகன் மழுப்பினான். "அதுதான் எனது பெயராக இருக்க வேண்டும்". சந்தோசத்துடன் அவன் துள்ளிக் குதித்தான்.

"தம்பிமாரே!! இந்தக் குளத்தில் சித்திரா பௌர்ணமியில் மலரும் பூவைப் பறிக்கப் பலர் முயற்சிக்கிறார்கள். அந்த மலரும், அதன் விதையும் அவர்களிடம் போனால் எனது அக்காவின் நிலையென்னவாகும்? எனது நிலையென்ன? அதுதான் காவலாக நான் இருக்கிறேன். பூவைப் பறிக்க யாரையும் விடமாட்டேன். அடித்துத் துரத்திவிடுவேன். பயத்தினால் யாரும் வருவதுமில்லை". குதிரை மனிதன் கூறினான்.

## 10

ஆனந்தவர்மனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. தாங்கள் யார் என்று அவனுக்குத் தெரியாமல் செயற்பட நினைத்தார்கள். "குளத்தில் ஆயிரம் பூக்கள் உள்ளன. அவற்றின் நடுவில் அந்தப்பூவை எப்படி அடையாளம் காணுவீர்கள்". வளவன் கேட்டான். "நானும் அந்தப்பூவைக் காணவில்லை. ஆனால் பூவை எடுப்பதற்காக வருபவருக்கு அது தெளிவாகக் காட்டும். சித்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமியன்றுதான் அந்தப் பூ விரியும். என்று முனிவர் சொன்னது ஞாபகம்.''

அப்படியென்றால் இன்றைக்குப் பார்க்கலாமா? அறிவழகன் கேட்டான்.

''நீங்கள் சின்னப் பிள்ளைகள். உங்களால் பார்க்கமுடியாது.''

''ஏன் முடியாது? முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.'' அறிவழகன் கூறினான்.

''குளத்துக்குள் ஒரு அகன்ற கல் இருக்கிறது. அதில் நின்று பார்த்தால் தெரியும். ஆனால் குளத்துக்குள் செல்லமுடியாது. புதைந்துபோய்விடுவீர்கள்''.

''நாங்கள் முயற்சி செய்து பார்க்க அனுமதிப்பீர்களா? உங்களுக்கு உதவி செய்த புண்ணியம் எங்களுக்குக் கிடைக்கும்.'' ஆனந்தவர்மன் கேட்டான். ''இதைத்தான் சிறுபிள்ளை விளையாட்டு என்பார்கள்''. என்று குதிரை மனிதன் சிரித்தான்.

''இன்றுபோனால் அடுத்த சித்திரா பௌர்ணமிக்குத்தானே அந்தப் பூ மலரும். நீங்கள் அனுமதித்தால் போதும். மிகுதியை நாங்கள் பார்த்துக் கொள்வோம். நாங்கள் சிறுவர்கள் என்று யோசிக்காதீர்கள். உங்கள் உதவியிருந்தால் சாதிப்போம்.'' ஆனந்தவர்மன் கெஞ்சினான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால் அதில் ஆபத்துக்கள் வரும். என்ன செய்வது? சரி உங்கள் விருப்பம்." அவன் அனுமதித்தான்.
சிறுவர்கள் ஆயத்தமானார்கள். தங்கள் குதிரைகளில் தாவினார்கள். குதிரை மனிதனும் தனது குதிரையில் ஏறிக்கொண்டான். சற்று நேரத்தால் குளக்கரையில் நின்றார்கள்.


"அறிவழகா! குதிரையில் கயிற்றைக் கட்டு. வளவா! உதவியாக இரு." கட்டளையிட்டான். ஆனந்தவர்மன் தனியே ஒருபுறம் சென்றான். "எங்கள் அன்னையே ஸ்ரீதேவியே! இன்று சித்திரா பௌர்ணமி. நாங்கள் தொடங்கும் இந்தச் செயலுக்கு உதவியாக இருதாயே. அந்தப்பூவைக் காட்டு". மனதுக்குள் வேண்டுதல் செய்தான். "மகனே! வழித்துணையாவேன். நான் சொல்வதுபோல் நீ செய். வெற்றி பெறுவாய்." அவனது காதில் அன்னையின் குரல் ஒலித்தது.
அறிவழகன் ஆயத்தமாக நின்றான். கயிறின் நுனியில் வளையமிட்டான். கயிற்றைச் சுழற்றிக் குளத்தினுள் உள்ள கல்லை நோக்கி வீசினான். அவன் குறி தவறவில்லை. கயிறு கல்லோடு இறுகியது. ஆனந்தவர்மன் கயிற்றில் தொங்கியவாறு கல்லை நோக்கிச் சென்றான். குதிரை மனிதன் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கையை மாற்றி மாற்றி நகர்ந்தான். பெரிய அகன்ற கல் தெரிந்தது. அதனை நோக்கிச் சென்றான்.

நிலவு வெளிக்கிளம்பியது. நிலவில் கல்லின் வடிவம் தெரிந்தது. மெல்லிய காற்று வீசியது. குளம் நிறைந்து பூக்கள் தெரிந்தன. எப்படி அந்தப் பூவை இனங்காண்பது.? அவனது கண்கள் விசாலமாக விரிந்தன. நிலவு வான்வீதியில் பவனிவந்தது. குளத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீன்கள் துள்ளிக் குதித்தன. ஆயத்தமாகக் கொண்டு வந்த உணவுகளை குளத்தினுள் வீசினான். மீன்கள் திரண்டு வந்தன. உணவினைக் கௌவிச் சென்றன.

## 11

மீண்டும் உணவினை வீசினான். பூக்களையும் தள்ளிக் கொண்டு வந்தன. பூக்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கினான்.

நிலவு உச்சிக்கு வந்து கொண்டிருந்தது. கல்லில் முழங்காலில் நின்றான். கண்களை மூடினான். "தாயே! வழிகாட்டுங்கள்".





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரந்தான். கண்களைத் திறந்தான். அங்கே தூரத்தில் ஒரு பெரிய பூ தெரிந்தது. அது மலர்ந்தும் மலராத வடிவத்தில் தெரிந்தது.

தனது இடுப்பில் இருந்த துணியை எடுத்தான். இடுப்பில் பட்டிபோல் கட்டினான். அதன் நுனியைக் கயிற்றில் கட்டினான். கைகளை நீட்டியவாறு தேவியைப் பிரார்த்தனை செய்தான். பெரியதொரு மீன் பூவைத் தள்ளி வந்தது. பூ அருகில் வந்ததும் அதற்குள் இருக்கும் காய் தெரிந்தது.

கைக்கு எட்டிய தூரத்தில் வந்து விட்டது. நிலவு உச்சிக்கு வந்து கொண்டிருந்தது. ஆர்வம் மேலிட்டது. எட்டிப் பூவைப் பறிக்க



முனைந்தான். கால் சறுக்கியது. தண்ணீரினுள் விழுந்துவிட்டான். கட்டிய துணி அவிழ்ந்துவிட்டது.

அதளபாதாளத்தில் மூழ்கினான். மனதுக்குள் "அன்னையே! காப்பாற்றுங்கள். நிலவு உச்சிக்கு வந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் பூ மறைந்துவிடும்." தேவியை இரந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரிய மீன் நீரைக்கிழித்துக் கொண்டு வந்தது. அவனை மேல்நோக்கித் தள்ளியது. அவன் தண்ணீரின் மேல் வந்து விட்டான். ஒரு கையால் பூவைப் பறித்தான். மறுகையால் கயிற்றைப் பிடித்தான். கல்லில் காலையூன்றி ஏறிநின்றான். அவனது உள்ளம் துள்ளியது. பூவோடு காயையும் துணியில் கவனமாகக் கட்டினான். அதனைத் தனது இடுப்பில் இறுக்கிக் கட்டினான். வந்ததுபோலவே கயிற்றில் தொங்கியவாறு கரையை நோக்கி வந்தான்.

அவன் வரும்வரை குதிரை மனிதனுக்கு நிம்மதியில்லை. ஆனந்தவர்மன் கயிற்றில் தொங்கியவாறு கைகளை மாற்றி மாற்றி வந்து கொண்டிருந்தான். அதனைப் பார்த்த குதிரை மனிதன் "அதோ ஆனந்தவர்மன் வருகிறான்". சந்தோசத்துடன் சத்தமிட்டான். ஆனந்தவர்மன் கரைக்கு வந்ததும் பூவோடு காயையும் குதிரை மனிதனின் கையில் கொடுத்தான். குதிரை மனிதன் காயைக் கையில் வாங்கிக் கண்களில் ஒற்றினான். அங்கே குதிரை மனிதனைக் காணவில்லை.



அங்கே அழகிய இளவரசன் திருமாவளவன் நின்றான். "இளவரசே! வணக்கம். எங்கள் முயற்சி திருவினையானது. எங்கள் இளவரசரை மீட்டுவிட்டோம்." வளவன் ஆனந்தக்கூத்தாடினான்.

"இளவரசே! உடனடியாக எங்களோடு வாருங்கள். இந்தக்காயைக் கொண்டுபோய் விதையை நாகத்தின் வாயில் போடவேண்டும். புறப்படுங்கள்". அவசரப்படுத்தினான். ஆனந்தவர்மன் பூவோடு காயையும் வாங்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகமா? எங்கிருக்கிறது? நீங்கள் யார்? சொல்லுங்கள்". திருமாவளவன் கேட்டான். "இளவரசே! இவற்றைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு இப்போது நேரமில்லை. உடனடியாகச் செல்லவேண்டும். வாருங்கள்". கூறிக்கொண்டு குதிரைகளில் ஏறினார்கள். திருமாவளவனும் தனது குதிரையில் ஏறிக் கொண்டான். குதிரைகள் வந்தவழியே விரைந்தன.

"அறிவழகா! நீ தந்தையை அழைத்துவா". ஆனந்தவர்மன் கட்டளையிட்டான். அவன் காற்றென விரைந்தான். அந்தப் பாழடைந்த மண்டபத்தில் குதிரைகள் நின்றன.



குதிரைகளின் குளம்பொலிகளைக் கேட்டதும் கதவுகள் திறந்து கொண்டன. ஆனந்தவர்மன் உள்ளே சென்றான். மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள். "அன்னையே! வந்துவிட்டோம்". என்றான். "அந்தக் காயை உடைத்து அதனுள் இருக்கும் விதையை வெளியில் எடு". கட்டளை பிறந்தது. "அப்படியே செய்கிறேன்.""




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.சொல்லிக் கொண்டு பூவின்காயை உடைத்தான். அதனுள் இருந்த விதையை வெளியில் எடுத்தான். “வேறென்ன செய்ய வேண்டும். தாயே”. கேட்டான். “விதையில் வெளித்தோலை உரித்து பருப்பை எனது வாயில் வை”. கட்டளை பிறந்தது. அப்படியே செய்கிறேன்” என்றான். அவன் விதையின் வெளித்தோலை உரித்துக் கொண்டிருந்தான்.

12

“அங்கு யாருமே இல்லை. இவன் மட்டும் கதைக்கிறானே? .யாரோடு கதைக்கிறான். ஒரு சத்தமும் கேட்கவில்லையே”. திருமாவளவன் அதிசயத்தோடு வளவனிடம் கேட்டான். 'இளவரசே! பொறுத்திருந்து பாருங்கள்”. அவன் பதிலளித்தான். அரசர் அழகேஸ்வரன் வந்தார். வளவன் சத்தமிடாதபடி சைகை செய்தான். அரசர் அப்படியே நின்றார்.



தாமரை விதையின் பருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு அறையின் கதவைத் திறந்தான். அதிலிருந்து ஒளிபிறந்து பரந்தது. “மகனே! பயப்படாமல் அருகில் வா. பருப்பை எனது நடுவாயில் போடு. நான் விழுங்கிவிடுவேன். என்னை எல்லோரும் பார்ப்பர்கள்”. கட்டளை பிறந்தது.

ஆனந்தவர்மன் துணிந்து நின்றான். பருப்பை நாகத்தின் நடுவாயில் போட்டான். அது விழுங்கிக் கொண்டது. அப்படியே படுத்தக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெல்ல மெல்லப் பாம்பு ராணியாக மாறிக் கொண்டிருந்தது. ஆனந்தவர்மனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கதவு நன்றாகத் திறந்து கொண்டது. அங்கு நடக்கும் காட்சியை திருமாவளவன் கண்ணாரக் கண்டான்.

சௌந்தர்யா தனது முழுமையான உருவத்தைப் பெற்றுவிட்டாள். "மகனே! நீ முன்னால் போ. நான் பின்னால் வருகிறேன்." சௌந்தரல்யா கூறினாள். அவள் கூறியது அனைவருக்கும் கேட்டது.



"அக்கா! நாம் மீண்டும் மறுபிறவி எடுத்துவிட்டோம். இந்தப் பாலர்கள் நம்மை மீட்டு விட்டார்கள்". ஆனந்தக் கண்ணீர் மல்க திருமாவளவன் கூறினான்.

"எல்லாவற்றுக்கும் காரணம் அரசர் அழகேஸ்வரர்தான். அவர் மட்டும் இச்சிறுவர்களை அனுப்பாது விட்டிருந்தால் நாம் இந்தப்பேற்றைப் பெற்றிருக்க மாட்டோம். காலமெல்லாம் பாம்பாகவும், குதிரையாகவும் வாழ்ந்திருப்போம்." அழுதவாறே சௌந்தர்யா கூறினாள்.

முனிவர் அப்போதுதான் வந்தார். "இங்கு நடப்பதை உணர்ந்தேன். தக்க சமயத்திலதான் வந்துள்ளேன். குழந்தாய் சௌந்தர்யா! நீ தெரியாது செய்த தவறை நான் அப்போது உணரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன்னையும், உன் தம்பியையும் எனது சாபம் வாட்டிவிட்டது. நீ அழகேஸ்வரரை மணந்து இச்சிறுவர்களுக்குத் தாயாக இரு. அழகேஸ்வரா! சௌந்தர்யாவை ஏற்றுக்கொள். திருமாவளவா! நீ உனது நாட்டை ஆள்வாயாக. சிறுவர்களே! உங்கள் திறமையை மெச்சுகிறேன்''. முனிவர் கூறி வாழ்த்தினார்.

சௌந்தர்யாவின் கையைப் பற்றும்படி அழகேஸ்வரரைப் பணித்தார். அவ்வாறே அழகேஸ்வரர் செய்தார். சௌந்தர்யா சிறுவர்களை அன்பொழுகத் தழுவிக் கொண்டார். "திருமாவளவா! இச்சிறுவர்கள் மன்னர் அழகேஸ்வரரின் பிள்ளைகள். இவர்கள் மூலம் உங்கள் விடுதலைக்காகச் சௌந்தர்யாவுக்கு உணர்த்தினேன். சௌந்தர்யா அதனைப் புரிந்து கொண்டாள். கடும் விரதத்தை மேற்கொண்டாள். அதனால் நல்ல சக்தி கிடைத்தது. அந்தச் சக்தியால் தக்க தருணத்தில் ஆனந்தவர்மனுக்கு உதவினாள். எல்லோரும் சந்தோசமாக வாழுங்கள்". வாழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியர்.....



செல்வி அ.அருள்சுலக்ஷிகா திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஒன்பதாந்தரத்தில் கல்வி கற்கும் மாணவி. சிறுவயதிலிருந்தே எழுதி வருகிறார். திருகோணமலையில் இருந்து எழுதுபவர்களில் வயதில் குறைந்தவர் இவராகத்தான் இருக்க வேண்டும். எழுதுவதால் மொழியாற்றலைப் பெருக்கிக் கொள்ளலாம். இந்த நூலை வாசிப்பவர்கள் அதன் கதையோட்டத்தைப் புரிந்து கொள்வார்கள். கையில் எடுத்தால் ஒரே மூச்சில் வாசித்து முடித்து விடுவார்கள்.

ஆங்கிலத்தில் 'ஹரிப்பொட்டர்' நூலை லட்சக்கணக்கில் வெளியிடுகிறார்கள். சினிமாப் படமாகவும் தயாரிக்கிறார்கள். மந்திர, தந்திரக் கதையாக ஹரிப்பொட்டர் அமைந்திருக்கிறது. நமது பழங்கதைகளான விக்ரமாதித்தன் போன்ற கதைகளைப் போன்று இருப்பதைப் புரிந்து கொள்வார்கள். அவ்வாறான கதைகளை இன்று வரவேற்று இரசித்துப் படிக்கிறார்கள். மாயாஜாலங்களுக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள்.

செல்வி அ.அருள்சுலக்ஷிகாவின் 'இராணியாக மாறிய பாம்பு' கதையினையும் அவ்வாறே நகர்த்திச் செல்வதைப் பார்க்கிறோம். அவருடைய ஆற்றலுக்கு இந்நூல் ஒரு வெற்றி என்றே சொல்லலாம். இவ்வாறான நூல்களை நமது மாவட்டச் சிறார்களும் எழுத வேண்டும். செல்வி அ.அருள்சுலக்ஷிகா நிறையவே எழுத வேண்டும். அத்துடன் தனது படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். செல்வி அ.அருள்சுலக்ஷிகாவின் எழுத்துத் துறைக்கு நாமெல்லோரும் உரமாக இருந்து, ஊக்கமளிப்போம். இந்நூலை வாங்கி வாசித்து இந்த இளம் எழுத்தாளரை ஊக்குவிக்க முன்வருமாறு அழைக்கின்றேன்.

ஓ.குலேந்திரன்
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்
பொருளாளர், தமிழ்ச் சங்கம் - திருகோணமலை
53, ஆசிரியர் சதுக்கம்.
மத்திய வீதி உவர்மலை
திருகோணமலை

ISBN : 978-955-52535-3-6
Price : Rs. 160/-

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org